Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.170/2022 PW-5**

Name : இளயச்சந்திரன்
Father / Husband name : செங்கேணி
Village : திண்டிவனம்
Age : 56
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 10.06.2026

Accused present. Both counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் டாஸ்மாக்கடையில் சேல்ஸ்மேன் வேலை செய்துவருகிறேன். அ.சா.4 கலைவாணன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். 2வது கையொப்பம் அ.சா.4 கலைவாணன் என்பவருடையது. சுமார் 4, 5 வருடத்திற்கு முன்னதாக மாலை சுமார் 6 மணியளவில் ரோசனை காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 30.09.2021 அன்று மதியம் 1 மணிக்கு செஞ்சி ரோடு டாஸ்மாக்கடையில் 11552 ல் வேலை செய்துகொண்டிருந்தபோது அங்கு வந்த ரோசனை காவல் நிலைய ஆய்வாளர் மேற்படி டாஸ்மாக்கடையை

பார்வையிட்டு வரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகசரில் நானும் கலைவாணனும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.